வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 1 of 2023

வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கிப்சன்ஞானதுரை | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் | தொழில் | : | IT வேலை |
| கிராமம் | : | தொண்டாமுத்தூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | கோவை | வயது | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.09.2023.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

முதல் விசாரணை: நாள்: 27.09.2023.

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு IT நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 18.09.2022 ஆம் தேதி ஞாயிற்றுக்கு கிழமை எனக்கு பெண் பார்ப்பதற்காக வடுகபாளையத்திற்கு நான், எனது அப்பா, அம்மா, திருப்பூரிலிருந்து அத்தை அமிர்தசெல்வி, மாமா ஆசிர்கோவில்பிள்ளை, மற்றொரு மாமா அகஸ்டின் ஆகியோர்கள் சேர்ந்து TN 39 BT 3607 என்ற ஆமினி வாகனத்து பெண் பார்த்துவிட்டு திரும்பி வந்தபோது திருப்பூர்–பொள்ளாச்சி ரோட்டில் வந்து பல்லடம் தாலுக்கா அலுவலகம் எதிரில் உள்ள National Diriving School முன்பாக காரை ரோட்டின் ஓரமுள்ள மண் தரையில் நிறுத்திவிட்டு படிக்கட்டில் எனது அப்பா, அம்மா, அத்தை 3 பேரும் உட்கார்ந்து இருந்தாகள், நாங்கள் அருகில் நின்று கொண்டிருந்தோம். எங்களுக்கு எதிர் திசையிலிருந்து வந்த TN 42 AH 7984 என்ற எண்ணுள்ள ஈச்சர் லாரி அதிவேகமாக வந்து திடீரென வந்து நின்றுகொண்டிருந்த பல்சர் இரு சக்கர வாகனத்தில் மீது மோதி, படிக்கட்டில் உட்கார்ந்திருந்த எனது அப்பா, அம்மா, அத்தை ஆகியோர்கள் மீது மோதி, ஆமினி வாகனம் மீது மோதி வண்டி கவிழ்ந்து விட்டது. எனது அப்பா ஈச்சர் லாரியின் அடியில் இருந்தார். எனது அப்பாவின் வலது தோள்பட்டை மற்றும் தலையின் பின் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது. எனது அம்மாவிற்கு பின் தலை முழுவதுமாக சேதமாகிவிட்டது.

2. எனது அத்தைக்கு கை மற்றும் காலில் அடிப்பட்டு, கனுக்காலுக்கு கீழ் துண்டாகிவிட்டது. என்னுடன் இருந்த ஆசிர்கோவில்பிள்ளை, அகஸ்டின் மற்றும் அருகில் இருந்த நந்தகுமார், சந்துரு ஆகியோர்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். எனது அம்மா, அத்தை இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னார். எனது அப்பாவிற்கு முதலுதவி சிகிச்சை அளித்தார்கள். பல்லடம் அரசு மருத்துவமனையில் சவகிடங்கில் பராமரிப்பு பணி மேற்கொண்டதால் அவர்களை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனது அப்பாவையும் மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். ஆனால் நாங்கள் எனது அப்பாவை கோவை KMCH மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். பின்னர் பல்லடம் காவல் நிலையம் வந்துவிபத்து குறித்து புகார் கொடுத்தோம். விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் வாகனத்தை ஒட்டி வந்த ஓட்டுநரின் பெயர் பட்டீஸ்வரன் என்று தெரிந்து கொண்டேன். எனது அம்மா, அத்தை ஆகியோர்கள் பிரேதத்தின் மீது காவல்துறை துணை கண்காணிப்பாளர் பிரேத விசாரணை செய்தார்கள், நான் உடனிருந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் அ.சா.ஆ.1** ஆகும். விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் வாகனத்தின் ஓட்டுநரை பார்த்தால் என்னை அடையாளம் முடியும். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. (எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது). போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள். எதிரியை அடையாளம் காண்பிப்பதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.09.27 19:30:30 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.